**கூடுதல் சார்பு நீதிமன்றம், தென்காசி.**

முன்னிலை:-**திருமதி.என். மாரீஸ்வரி, எம்,ஏ,எம்.எல்**

**கூடுதல் சார்பு நீதிபதி, தென்காசி**.

2023ம் ஆண்டு ஜனவரி திங்கள் 4ம் நாள் புதன்கிழமை

**அசல் வழக்கு எண்.276/2016**

1. செல்வராஜ்
2. தேவதாஸ்
3. அமலோற்பவம்
4. கோயில்புஷ்பம்
5. மரியபுஸ்பம்
6. சீனிவாசகம்
7. நேசமணி
8. கலாராணி
9. கிரேஸ் வசந்தா
10. சாலமோன் ராஜ்
11. லூர்து அம்மாள் (இறப்பு)
12. கோயில்பிள்ளை
13. லீலாபுஸ்பம்
14. இம்மானுவேல்
15. திலகர்
16. தாவீது ...வாதிகள்

(இடைநிலை விண்ணப்ப எண் 319/2018 நாள் 7.8.2018ன்படி
3 முதல் 16 வாதிகள் கட்சி சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

/எதிர்/

1. பாவூர்சத்திரம் வணிகர்கள் சங்கர்
   அதன் தற்பாதைய தலைவர் பாலசுப்பிரமணியன் மூலம்
2. பாவூர்சத்திரம் வணிகர்கள் சங்கம்
   அதன் தற்போதைய செயலாளர் விஜய்சிங்ராஜ் மூலம்
3. பாவூர்சத்திரம் வணிகர்கள் சங்கம்
   அதன் தற்போதைய பொருளாளர் ஆரோக்கியராஜ் மூலம்
4. லதா
5. தங்கசாலினி
6. ராஜபிரியா
7. பிரியமாலினி
8. சாந்தக்குமார்

(இடைநிலை விண்ணப்பம் எண். 5/21 நாள் 20.12.21ன்படி
சீர்திருத்தம் செய்யப்பட்டுள்ளது) .பிரதிவாதிகள்

.

இவ்வழக்கு கடந்த 08.11.2016ம்தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு வாதிக்களுக்காக வழக்கறிஞர் திரு.என்.மாரித்துரை அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 3 பிரதிவாதிகளுக்காக வழக்கறிஞர் திரு.ஆர்.ஜெகதீசன் அவர்கள் ஆஜராகியும், 4 முதல் 8 பிரதிவாதிகள் ஒருதலைதரப்பாக்கப்பட்டும் வழக்குரை மற்றும் எதிர்வழக்குரை பரிசீலனை செய்து எழுவினாக்கள் வனையப்பட்டு இவ்வழக்கு விசாரணைக்காக இன்று (04.01.2023ம்) பட்டியலில் போடப்பட்டிருந்த நிலையில் போதுமான கால அவகாசம் கொடுக்கப்பட்டும் வாதி ஆஜராகததாலும், இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்..

<u>தீர்ப்புரை</u>

அ) பிராது தபசில் 1ம் அயிட்ட சொத்து 1,2 வாதிகளுக்கு மட்டும் பாத்தியப்பட்டதென பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை செய்யும்படிக்கும்

ஆ) பிராது 2ம் அயிட்ட சொத்தில் 1 முதல் 3 பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்து கட்டியள்ள கட்டுமானத்தை அகற்ற ஒரு (Mandatory Injunction) செயலுறுத்துக் கட்டளை பிறப்பிக்கும்படிக்கும்

இ) 1,2 வாதிகளுக்கு பாத்தியப்பட்ட பிராது2ம் தபசில் சொத்தினை 1 முதல் 3 பிரதவிாதிகள் சமூகம் நீதிமன்றம் குறிப்பிடும் ஒரு தினத்திற்குள் 1,2 வாதிகளிடம் சுவாதீனம் கொடுத்து போகும்படிக்கும், அவ்வாறு 1 முதல் 3 பிரதிவாதிகள் செய்து போக தவறும்பட்சத்தில் நீதிமன்றே 1,2 வாதிகளுக்கு சுவாதீனம் கொடுக்க வேண்டியும்

ஈ) பிராது தபசில் சொத்தினை 4 மதல் 7 பிரதிவாதிகளிடமிருந்து 1 முதல் 3 பிரதிவாதிகள் பெற்ற கிரைய ஆவணம (ஆவண எண்.2585/2006)ஆனது (Null and void) செல்லாது என பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை செய்யும்படிக்கும் மற்றும் வழக்கின் செலவு தொகையும் செலுத்த கோரி தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

உ) பிராது 1ம் தபசில் சொத்தில் ஒரு பகுதியான பிராது 2ம் தபசில் சொத்து நீங்கலாக பிராது 3ம் தபசில் சொத்தில் 1 முதல் 3 பிரதிவாதிகளோ அவர்களது வகையாட்களோ, வேலையாட்களோ, கட்டுமான கட்டியோ அல்லது வேறு யாதொரு இடைஞ்சலும் செய்யக்கூடாது என பிரதிவாதிகளுக்கு எதிராக ஒரு நிரந்தர மறியல் உறுத்துக்கட்டளை

பிறப்பிக்கும்படிக்கும் மற்றும் வழக்கின் செலவு தொகையும் செலுத்த கோரி வாதிகளால்



இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்குரை மற்றும் எதிர்வழக்குரை ஆகியவற்றை பரிசீலித்து தீர்வுக்காக கீழ்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டன.

1. Whether the Ist item of suit property is absolutely belongs to the Plaintiff?
2. Whether the sale deed executed by D4 to D7 in favour of D1 to D3 in document No.2585-2006 is valid one?
3. Whether the plaintif are entiled for the relief of declaration and recovery of possession as prayed for?
4. Whether the right claimed by the plaintiff in respect of Ist item was extinguished?
5. Whether the suit is bad for non joinder of necesary parties?
6. Whether the plaintif are entiled to the relif of mandatory injunction as prayed for?
7. Whether the plaintif are entiled for the relief of permanent injunctio as prayed for?
8. To whatother relief the plaintiff are entitled to?

**"Trial List. Adjournment petition filed and dismissed. Sufficient time given plaintiff not present adjournment petition dismissed. Trial list. Hence suit is dismissed for default . No cost. "**

2023ம் ஆண்டு ஜனவரி திங்கள் 4ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

(ஓம்)என். மாரீஸ்வரி

கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.

--------------------------------

கூ. சா.நீ., தென்காசி

அசல் வழக்கு எண் 276/2016

தீர்ப்புரை அசல்/வரைவு

நாள். 04/01/2023

--------------------------------